பக்கங்கள்:-26

காலை முரசு

## அநுர அணியினர் எல் போர்ட் காரர்கள்

### ரணில் கடும் விமர்சனம்



“நாடாளுமன்றத் தேர்தலின்போது எல் போர்ட் காரர்களைத் தெரிவு செய்ய வேண் டாம் எனவும், 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 10 | செவ்வாய்க்கிழமை | 22.04.2025 | அதிர்வு 261

# புதிய பாப்பரசர் தெரிவுக்கான கர்தினால்களில் இலங்கையின் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும்!



புனித பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று கர்த் தருக்குள் மீளாத் துயில் கொண்டமையை அடுத்து புதிய பாப்பரசர் தெரிவு பற்றிய பேச் சுக்கள், தகவல்கள் ஊடகங்களில் வெளி யாகத் தொடங்கியுள்ளன.

காலமான பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிக்கிரியைகள் முடிவடைந்த பின் னர் புதிய பாப்பரசர் தெரிவு ரோமில் நடை பெறும்.

தற்போதைய பாப்பரசரின் மறைவை யொட்டி ஒன்பது நாள்கள் துக்கம் அனுஷ்டிக் கப்படும். அதன் பின்னர் புதிய பாப்பரசர் தெரிவு இடம்பெறும். அதற்கு இன்னும் 15 முதல் 20 நாள்கள் எடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வழக்கமாக சுமார் 120 இற்கு உட்பட்ட கர்தினால்கள் கொண்ட கர்தினால்கள் அவையே புதிய பாப்பரசரை 06





# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரி நீர்கொழும்பில் பெரும் போராட்டம்

### பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் பங்கேற்பு

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத் தாக்குதல் இடம்பெற்று ஆறு வருடங்கள் நிறைவடைந்தும் இது வரை தீர்வு கிடைக்கவில்லை என்பதை வலி யுறுத்தி நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய சந் தியில் நேற்று மாலை 3.30 மணியளவில் கவ னவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட் டது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் குறிப்பிடப்பட்ட அட்டை களை ஏந்தியிருந்தனர்.

இவர்கள் கடந்த பல மாதங்களாக ஒவ்வொரு 21ஆம் திகதியன்றும் இந்தச் சந்தியில் போராட் டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 05



# அரசின் பொய் நாடகங்களுக்கு இனியும் மக்கள் ஏமாறமாட்டர்!

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

“ஆட்சியைப் பொறுப்பேற்றவுடனேயே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ஆனால் ஆட்சியேற்று 6 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை சூத்திரதாரியை இந்த அரசாங்கத்தால் இனங்காண முடியாமல் போயுள்ளது. அரசாங்கத்தின் பொய் நாடகங்களுக்கு இனியும் மக்கள் ஏமாறப் 06




நேற்று ஒரு வழக்குப் பற்றிக் குறிப்பிட்டு இருந்தேன். ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட அந்த வழக்கில் சில சுவாரசியமான விடயங்கள் இருக்கின்ற காரணத்தினால் அதனை இன்று என் பத்தியில் சேர்த்துக் கொள்கிறேன்.

2023 அக்டோபர் எட்டாம் திகதி மட்டக் களப்பு செங்கலடிப் பகுதிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தந்த சமயம் கொம மாந்துறை பகுதியில் மயிலத்தமடு,மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினைக்குத் தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப் பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவி யலாளர்கள் என முப்பது சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கே ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத் தில் நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலை யில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிராளிகள் சார்பில் முன்னிலையான 06

# இலங்கை போக்குவரத்து சபைக்கு 1300 மில்லியன் ரூபா வருமானம்

புத்தாண்டு காலத்தில் இலங்கை போக்குவரத்து சபை 1300 மில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளது.

இதன்படி ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 19 திகதி வரையிலான காலப்பகுதியில் இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அத்துடன், பண்டிகைக் காலத்தில் இலங்கை போக்குவரத்து சபை ஈட்டிய அதிகூடிய வருமானமாக இது பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்பில் 299 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 13ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்ட 300 போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் 299 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதில் பொலிஸ் மாஅதிபரால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைய இந்த சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது ஹெரோயினுடன் 121 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 86 பேரும், கஞ்சாவுடன் 84 பேரும், போதை வில்லைகளுடன் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மூளை காய்ச்சல் காரணமாக இளம் பெண் உயிரிழப்பு



(எஸ்.ரகுதீஸ்)

மூளைக் காய்ச்சல் காரணமாக இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பளைவீமன்காமம், தெல்லிப்பளையைச் சேர்ந்த கவிந்தன் சாமினி (வயது 23) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புது வருடத்தன்று காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு கடந்த சனிக் கிழமை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று திங்கள் கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். சாட்சிகளை காங்கேசன்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர்.



# காதலியைக் கத்தியால் குத்தி படுகொலை செய்த காதலன்!

## புத்தளத்தில் கொடூரம்

காதலனின் கத்திக்குத்துக்கு இலக்காகி காதலி உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் புத்தளம், வென்னப்புவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

20 வயதுடைய காதலியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த காதலியும் சந்தேக நபரான காதலனும் ஒரு வருடத்துக்கும் அதிக காலமாக காதல் உறவில் ஈடுபட்டிருந்துள்ளனர்.

இந்நிலையில், உயிரிழந்த காதலி சந்தேகநபருடனான காதல் உறவை முறித்துகொள்ள முயன்றுள்ளார்.

இதனால் கோபமடைந்த காதலன் காதலியின் வீட்டுக்குச் சென்று தகராறில் ஈடுபட்டுள்ளார்.

தகராறின்போது சந்தேகநபரான காதலன் தனது காதலியைக் கத்தியால் குத்தியுள்ளார்.

படுகாயமடைந்த காதலி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து சந்தேக நபரான காதலன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், மாரவில பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதுடைய காதலனே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலா பயணிகள் வருகை எட்டு லட்சத்தை எட்டியது



இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 8 லட்சத்து 20 ஆயிரத்தை எட்டியுள்ளது.

இம்மாத இறுதிக்குள் இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10 லட்சத்தை நெருங்கும் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு ஜுன் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10 லட்சத்தை தாண்டியது.

எவ்வாறாயினும், இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10 லட்சத்தை தாண்டும் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை கணித்துள்ளது.







# உணவுப் பாதுகாப்புக் குழு 6 ஆவது முறையாக கூடியது

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக உணவுப் பாதுகாப்புக் குழு 06ஆவது முறையாகவும் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, தலைமையில் நேற்று திங்கள் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் கூடியது.



இந்தக் கூட்டத்தில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார மற்றும் அமைச்சுகளின் செயலாளர்களைக் கொண்ட உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.







# ஈஸ்டர் தாக்குதலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை போராட்டம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்று போராட்டக்காரர்களோடு கலந்துரையாடினார். அத்துடன் ஊடகங்களுக்கும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணியளவில் போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் பூர்வாங்க ஆட்சேபனைகளை கிளப்பினார். அவரின் வாதம் சுவையாக இருந்தது. அது கவனிக்கப்பட வேண்டியது.

இரண்டு லத்தீன் சொல்லாடல்களை வைத்து அவர் வாதத்தை முன்னெடுத்தார்.



இதே விடயத்துக்காக ஏறாவூர் நீதிமன்றத்தில் முன்னர் 36 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது முறையான ஆதாரங்கள் முன்வைக்கப்படாத காரணத்தினால் அப்போது வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. இப்போது மீண்டும் அதே தகவல்களுடன் மட்டும் பொலிஸாரினால் மீண்டும் புதிய வழக்கு 30 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மேற்படி வீதி மறிப்பை ஒட்டி செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மற்றும் போராட்டத்தில் கலந்து கொள்ளாதவர்களும் இப்போது சேர்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கை லத்தீன் மொழியில் 'per incuriam' என்ற வாசகத்தின் அடிப்படையில் நிராகரிக்கக் கோருகிறேன்.

நீதிமன்றம் முன்னைய முடிவு ஒன்றைக் கவனிக்காமல் தவறுதலாக புதிய உத்தரவு ஒன்றை வழங்கியிருந்தால் அந்த புதிய உத்தரவை திருத்திக் கொள்வதைத்தான் இந்த லத்தின் வாசகம் குறிக்கின்றது. இந்த விடயத்துக்



காக ஏற்கனவே ஒரு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. அதே காரணங்களோடு புதிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருப்பதால் பழைய உத்தரவை கவனத்தில் எடுத்து இந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும். இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்ற முடிவை மீள மாற்றி அமைக்க வேண்டும் என்றார் சுமந்திரன்.

அடுத்தது – de minimis non curat lex என்றலத்தீன் வாசகத்தின் அடிப்படையில் கவனிக்கப்பட வேண்டும். அதாவது சிறிய, சிறிய – அற்பமான – விடயங்களை நீதி சர்ச்சைக்கு உட்படுத்தக் கூடாது என்பதாகும். இப்போது வீதி வழிமறிப்புக்காக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது. இந்த அற்ப விடயத்திற்காக வழக்கை தாக்கல் செய்து அனைவரது நேரத்தையும் வீணடித்து, எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நீதிமன்றத்தின் நேரத்தையும் வீணடித்து, இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளத. வீதியை மறித்த குற்றச்சாட்டுக்கு 50 ரூபா அபராதம் விதிக்க முடியும். அத்தகைய ஒரு குற்றத்திற்காக இந்த வழக்கை இவ்வளவு தூரம் இழுத்தடிப்பது அபத்தமான விடயம்.

அதுவும் இந்த வழக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு வரும் போது வீதியை மறித்தார்கள் என்று குற்றம் சுமத்துவது கேலிக்கூத்தான விடயம். ஏனென்றால் வீதியை மக்கள் மறித்தமையினால்தான் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியானார். தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க கொழும்பிலும் பிற இடங்களிலும் மக்கள் வீதிகளை மறித்துப் போராட்டங்களை நடத்தியமையினால்தான் ஜனாதிபதியானார். அப்படிப்பட்டவர் வருகின்ற போது வீதியை மறித்தார்கள் என்று இங்கு மக்களைத் தண்டிக்க முற்படுவது கேலிக்கூத்தான விடயம் என்றார் சுமந்திரன்.

அவரின் சமர்ப்பணங்களை செவிமடுத்த நீதிவான் பூர்வாங்க ஆட்சேபனை மீதான கட்டளைக்காக வழக்கை எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## புதிய பாப்பரசர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யும். எனினும், தற்போது 135 கர்தினால்கள் வாக்களிக்கக் கூடிய தகுதியில் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் அனைவரையும் வாக்களிக்க அனுமதிக்கக் கூடும் என்ற ஒரு கருத்து நிலவுகின்றது.

அடுத்த பாப்பரசர் யார் என்பது தொடர்பில் பலவித செய்திகள் உலக ஊடகங்களில் வெளியாகி வருகின்றன.

அதில் ஒன்றான நியூயோர் போஸ்ட் வெளியிட்ட ஊகத்தில் முதல் ஆறு நிலைகளில் உள்ள கர்தினால்களில் ஐந்தாவது இடத்தில் இலங்கையைச் சேர்ந்த ஒரேயொரு கர்தினாலான பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகை வெளியிட்ட பட்டியலின் ஒழுங்கு விதி வருமாறு:–

01. கர்தினால் லுயிஸ் டக்ளே (67 வயது – பிலிப்பீன்ஸ்)

02. கர்தினால் பிற்றோ பரொலின் (70 வயது – இத்தாலி)

03. கர்தினால் ஜீன் மார்க் அவலின் (66 வயது – பிலிப்பீன்ஸ்)

04. கர்தினால் வில்லியம் ஜக்கோபஸ் இஜிக் (71 வயது – டென்மார்க்)

05. கர்தினால் மெல்கம் ரஞ்சித் (வயது 77 – இலங்கை)

06. கர்தினால் றொபர்ட் சரா (வயது 79 – கயானா)

## அநுர அணியினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அனுபவம் மிக்கவர்களைச் சபைக்கு அனுப்புமாறும் கோரினேன். எனினும், எல் போர்ட் காரர்கள் சபைக்கு வந்தனர். இன்று வாகனத்தைச் சேதப்படுத்திவிட்டனர். வாகனத்தில் எடுப்பதற்கு ஒன்றும் இல்லை." – என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைக்கப்போவதில்லை. எனவே, பெரும்பான்மையைப் பெறுவதற்கு எதிரணிகள் ஒன்றுபட வேண்டும். பெரும்பான்மைப் பலம் இருந்தால்தான் சபைத் தலைவரைத் தெரிவு செய்ய முடியும் என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

எனவே, நாம் எவருடனும் மோதத் தேவையில்லை. பெரும்பான்மையைப் பெறுவதற்கு முயற்சிப்போம் என்றும் ரணில் கூறினார்.

## அரசின் பொய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போவதில்லை." – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் இடம்பெற்றபோது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராகக் காணப்பட்டார். 2018 இல் ரஞ்சித் மத்தும பண்டார அந்த அமைச்சுப் பதிவியிலிருந்து நீக்கப்பட்டார். மைத்திரிபால சிறிசேன, அவரது அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவின் பிரதானி உள்ளிட்டோரின் தவறால் இந்தச் சதித் திட்டத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது.

நாட்டில் பாரிய அழிவொன்று ஏற்பட்டது. அனைத்து இன மக்களும் இந்த அழிவால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியையே எதிர்பார்க்கின்றனர். வெளிநாட்டவர்கள் உட்பட நாட்டிலுள்ள மூவின மக்களும் இந்தச் சதியால் கொல்லப்பட்டுள்ளனர். இதன்

07



# மேர்வின் சில்வா உள்ளிட்ட நால்வருக்கு மறியல் நீடிப்பு

கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட நால்வரை எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட நால்வரும் நேற்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணைங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த மார்ச் மாதம் 5ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசின் பொய்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதான சூத்திரதாரி கைது செய்யப்பட வேண்டும்.

தாம் ஆட்சியைப் பொறுப்பேற்றவுடனேயே உயிரத்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ஆனால் ஆட்சியேற்று 6 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை சூத்திரதாரியை இந்த அரசாங்கத்தால் இனங்காண முடியாமல் போயுள்ளது. ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை நான் வெளிப்படுத்துவேன் என மார்ச் 21ஆம் திகதி ஜனாதிபதி கூறினார்.

ஆனால் தற்போது இது தொடர்பில் முழுமையான தகவல்களை தன்னால் கூற முடியாது என்றும், விசாரணைகள் சற்று தாமதமடையும் என்றும் அவர் கூறுகின்றார். ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குக் கையளித்துள்ளமையைப் பெரிய விடயமாக அவர் கூறிக் கொண்டிருக்கின்றார்.

கடந்த 6 மாதங்களில் இவற்றைக் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் கையளிக்கவில்லையா? 180 நாட்களாக இதனை மாத்திரமா செய்து கொண்டிருந்தனர்?

இந்த அறிக்கைகளை ஏற்கனவே நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அதில் சில பக்கங்கள் காணாமல்போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் அவையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறிருக்கையில் அதனை மீண்டும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் சமர்ப்பிப்பதன் ஊடாக ஜனாதிபதி என்ன கூற முற்படுகின்றார்? அரசாங்கத்தின் இதுபோன்ற நாடகங்களுக்கு இனியும் மக்கள் ஏமாறப் போவதில்லை." – என்றார்.

### சூதாட்ட விடுதியில்

# இளைஞர் கொலை! தம்பதியர் கைது!!

புத்தளம், ஆனமடுவ பிரதேசத்தில் உள்ள சூதாட்ட விடுதி ஒன்றில் ஏற்பட்ட தகராறில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தம்பதியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனமடுவ, வடத்த, ஹல்மில்லேவ பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மேற்படி இளைஞர் ஆனமடுவ பிரதேசத்தில் உள்ள சூதாட்ட விடுதி ஒன்றுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது அங்கிருந்த கணவன், மனைவி இருவருக்கும் இளைஞருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

அவ்வேளை, அந்தத் தம்பதி இளைஞ ரீரைப் பொல்லால் தாக்கிக் கொலை செய்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர்களான கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட இளைஞரின் தாயினது தம்பியும் அவரது மனைவியுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் முந்திரி கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களின் கடையும் சூதாட்ட விடுதிக்கு முன்பாக இருக்கின்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மௌலானாவைக் கேளுங்கள்!

ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று ஆறு ஆண்டுகள் நேற்றோடு கடந்தன. நேற்றைய தினத்துக்கு முன்னர் இந்தத் தொடர்க் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள், பின்னணிகள் குறித்துத் தமது விசாரணையில் தெளிவான முன்நகர்வுகளை அரசாங்கம் முன்வைக்காவிட்டால் - வெளிப்படுத்தாவிட்டால் - மீண்டும் நீதி கேட்டுப் போராட்டம் வெடிக்கும் என்ற சாரப்பட அறிவித்தல் விடுத்த திருச்சபைத் தலைவர் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், இப்போது அடக்கி வாசிக்கின்றார். புலன் விசாரணைகளிலும் அவற்றை ஒட்டிய நடவடிக்கைகளிலும் முன்னேற்றம் இருப்பது போன்ற ஒரு திருப்திகர பிரதிபலிப்பை அவர் தரப்பின் கருத்துகள் வெளிப்படுத்துகின்றன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்ட பயங்கரவாதக் குழுவின் தலைவர் எனக் கருதப்படும் சஹ்ரானுக்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும், 'சனல் - 4' நிகழ்ச்சியின் முக்கிய சாட்சியான ஆஸாத் மௌலானா தெரிவித்த விடயங்கள் உட்பட அந்த ஆவணப் படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பேராயர் கோரியிருக்கின்றார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக அரசுத் தலைவரான ஜனாதிபதியும் ஆளும் தரப்பினரும் இப்போது வெளியிட்டு வருகின்ற கருத்துக்களை நோக்குகின்ற போது, இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்களை முஸ்லிம் தீவிரவாதப் போக்குடைய தரப்பினர் முன்னெடுத்திருந்தாலும் அவற்றை அவர்கள் செய்வதற்குத் தூண்டி, ஊக்கம் கொடுத்து, வழி நடத்தியதன் பின்புலத்தில் அரசியல் தரப்புகள், நோக்கங்கள் நிச்சயம் இருந்திருக்கின்றன என்பது தெரிகின்றது.

இந்தப் பின்னணியிலேயே பிள்ளையான் இப்போது கைது செய்யப்பட்டு இருக்கிறார். ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற காலத்தில் சிறையில் இருந்தவர் பிள்ளையான். அவருக்கு இந்தத் தாக்குதலுடன் தொடர்பிருகின்றது என்ற விடயத்தை முதலில் அம்பலப்படுத்தியவர் அவருக்கு அக்காலகட்டத்தில் செயலாளராக இருந்த ஆஸாத் மௌலானா.

ஆஸாத் மௌலானா இப்போது நாட்டில் இல்லை. வெளிநாடு ஒன்றில் அரசியல் தஞ்சம் கோரி அங்கு புகலிடம் அடைந்திருக்கின்றார். 'சனல் - 4' ஆவணப்படத்திற்கு இந்த விடயங்களை ஒட்டி - பிள்ளையானை நேரடியாகச் சம்பந்தப்படுத்தி - ஆஸாத் மௌலானா வெளியிட்ட தகவல்களே குண்டுத் தாக்குதல் தொடர்பான புலனாய்வில் புதிய பரபரப்பையும் தாக்குதல் நோக்கங்கள் குறித்து சந்தேகங்களையும் ஏற்படுத்தி இருக்கின்றன.

இந்தத்தொடர் குண்டு தாக்குதலில் பிள்ளயானைச் சம்பந்தப்படுத்தி ஆஸாத் மௌலானா தெரிவித்த கருத்துக்கள் குறித்து உண்மைகளை கண்டறிவதாயின் அவரைப் புலனாய்வாளர்கள் விசாரணை செய்ய வேண்டும். வெளிநாடு ஒன்றில் அரசியல் தஞ்சம் புகுந்திருக்கும் ஆஸாத் மௌலானா நாட்டுக்குத் திரும்பி வந்து சாட்சியம் அளிப்பார் என்று நம்புவதற்கான வாய்ப்புகள் குறைவு. ஆயினும் குறைந்தபட்சம் இணையம் ஊடாக வேனும் அவரது சாட்சியத்தை - அவரது விளக்கங்களை - தகவல்களை - விசாரணைத் தரப்பு பெறுவது முக்கியமாகும்.

'சனல் - 4' ஆவணப்படத்துக்கு இவ்வளவு விடயங்களை தெரிவித்த ஆஸாத் மௌலானா நாட்டுக்கு திரும்பி வந்து சாட்சியமளிக்காவிட்டாலும், தாம் தஞ்சம் புகுந்துள்ள தேசத்தில் தமக்குப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமானால் இது பற்றிய உண்மைகளைத் தாமாகக் கூறவும், இலங்கை புலனாய்வார்களுடன் பரிமாறிக் கொள்ளவும் தயாராக இருப்பார். அதற்கான முன் முயற்சிகளை இலங்கையின் புலனாய்வாளர்கள் எடுத்திருக்கின்றார்களா என்று தெரியவில்லை. அது பற்றிய தகவலை பொது மக்களுக்கு புலனாய்வாளர்களும் அரசும் முன் வைப்பது முக்கியமாகும்.



# போக்குவரத்து ஊழியர்கள் சென்னையில் ஆர்ப்பாட்டம்

15 ஆவது சம்பள ஒப்பந்த பேச்சுவார்த்தையை விரைந்து முடிப்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, போக்குவரத்து ஊழியர்கள் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓய்வூதியர்களின் அகவிலைப்படி உயர்வுக்கு தீர்வு காண வேண்டும், 15 ஆவது சம்பள ஒப்பந்தம் தொடர்பாக விரைந்து பேசி முடிக்க வேண்டும், சென்னையில் அரசே இ-பஸ்கள், மினி பஸ்களை இயக்க வேண்டும், வரவுக்கும் செலவுக்குமான வித்தியாசத் தொகையை வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, மாநிலம் முழுவதும் மண்டல தலைமையகங்களில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று போக்குவரத்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தரப்பில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மாநிலம் முழுவதும், மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி, நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னையில் பல்லவன் இல்லம் முன்பு, போக்குவரத்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், அரசாங்க போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் தலைவர் ஆர்.துரை தலைமை வகித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட போக்குவரத்து தொழிற்சங்க நிர்வாகிகள் கருத்து தெரிவிக்கையில்,

“சம்பள ஒப்பந்தம் தொடர்ந்து தாமாதமாகி வருகிறது. அரசு உடனடியாக பேசி முடிக்க வேண்டும். ஓய்வு பெற்றவுடன் பணப்பலன், ஓய்வூதியர்களின் அகவிலைப்படி உயர்வுக்கு தீர்வு காண வேண்டும். 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 திகதிக்கு பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். வாரிசு வேலை வழங்க வேண்டும். காலிப்பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிறோம். அரசு எங்கள் கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும்,” என்று தெரிவித்தனர்.



# 1000 நாள்களாக போராட்டம் நடத்திவரும் பரந்தூர் மக்களே நம்பிக்கையோடு இருங்கள்

## த.வெ.க. தலைவர் விஜய் தெரிவிப்பு


ஆயிரம் நாள்களைக் கடந்து அறப் போராட்டம் நடத்தி வரும் என் பாசத்துக்குரிய பரந்தூர் மக்களே, நம்பிக்கையோடு இருங்கள் என்று த.வெ.க. தலைவர் விஜய் கூறியுள்ளார்.

சென்னையின் 2 ஆவது விமான நிலையத்தை காஞ்சிபுரம் அடுத்த பரந்தூரில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக பரந்தூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் உள்ள 13 கிராமங்களில் இருந்து 5,300 ஏக்கர் விவசாய நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. இதில், ஏகனாபுரம் உள்ளிட்ட கிராமங்கள் முற்றிலும் கையகப்படுத்தப்பட உள்ளதால், இத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, 1000 நாள்களைக் கடந்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக விஜய் தனது தனது எக்ஸ் பக்கத்தில்,

“மண்ணுரிமைக்காக, வாழ்வுரிமைக்காக ஆயிரம் நாள்களைக் கடந்து அறப் போராட்டம் நடத்தி வரும் என் பாசத்துக்குரிய பரந்தூர் மக்களே, நம்பிக்கையோடு இருங்கள், நாளை நமதே” என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, பரந்தூர் விமான நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் போராட்டக் குழுவினர் மற்றும் கிராம மக்களை த.வெ.க. தலைவர் விஜய் கடந்த ஜனவரி 20 ஆம் திகதியன்று நேரில் சென்று சந்தித்து தனது ஆதரவை கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மரபுகளை தகர்த்த சீர்திருத்த தலைவர் போப் பிரான்சிஸ்!

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தமது 88 ஆவது வயதில் நேற்று நித்திய இளைப்பாறினார்

உரோம் நேரப்படி நேற்று காலை 7.35 க்கு அவர் இறை பதம் அடைந்தார் என வத்திக்கான் அதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ் வத்திக்கானிலுள்ள சாந்தா மார்த்தா இல்லத்தில் இறைபதமடைந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

12 வருடங்களாக அவர் பரிசுத்த பாப்பரசராக இறைபணியாற்றிய நிலையில் நியூமோனியா தொற்று காரணமாகக் கடந்த பெப்ரவரி மாதம் ரோமிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்.

சிகிச்சைகள் நிறைவுற்று அவர் திரும்பிய சில நாள்களில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ், தனது வாழ்க்கை முழுவதையும் இறைபணிக்காகவும் திருஅவையின் பணிக்காகவும் அர்ப்பணித்தவர்.

நற்செய்தியின் விழுமியங்களைத் துணிவுடனும் நம்பிக்கையுடனும், உலகளாவிய அன்புடனும் எடுத்துரைத்தவர்.

குறிப்பாக, ஏழைகள் மற்றும் மிகவும் ஒதுக்கப்பட்டவர்களுடன் தனது உடனிருப்பை வெளிப்படுத்தியவர்.

பாப்பரசர் பிரான்சிஸ் 1936 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி அர்ஜென்டீனாவில் பிறந்தவர் ஆவார். இவர் கத்தோலிக்கத் திருச்சபையின் 266 ஆம் பரிசுத்த பாப்பரசர் ஆவார்.

இவர் 2013, மார்ச் 13ஆம் திகதி கத்தோலிக்கத் திருச்சபையின் 266ஆம் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தென் அமெரிக்காவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாப்பரசர் எனும் சிறப்பும் இவருக்கு உண்டு. இவர் வத்திக்கான் நகரின் தலைவரும் ஆவார்.



புவேனோஸ் ஐரேஸ் உயர் மறைமாவட்டத்தின் பேராயராகவும் இவர் பணியாற்றியவர்.

பாப்பரசர் பிரான்சிஸ், புவேனோஸ் ஐரேஸ் பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

பெர்கோலியோ இயேசு சபையில் துறவியாக 1958 ஆம் ஆண்டு இவர் இணைந்து கொண்டார்.

தொடர்ச்சி▼





# மரபுகளை தகர்த்த சீர்திருத்த தலைவர் போப் பிரான்சிஸ்!

தொடர்ச்சி▲

1967ஆம் ஆண்டில் இறையியல் படிப்பை முடித்த இவர் தமது 33ஆவது வயதில் இயேசு சபையில் குருத்துவப் பட்டம் பெற்றார்.

உலகப் புகழ்பெற்ற "டைம் வார இதழ்" பரிசுத்த பாப்பரசர் பிரான்சிசை 2013ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் என்று அறிவித்துக் கௌரவப்படுத்தியிருந்தது.

உலகம் முழுவதும் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தமை யாவரும் அறிந்த விடயமே.

பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கைக்கும் விஜயம் செய்திருந்தார். மன்னார் மடுத்திருத்தலத்தில் பாப்பரசர் பிரான்சிஸ் தலைமையில் விசேட ஆராதனைகளும் நடைபெற்றன.

பல நூற்றாண்டுகள் பழமையான கோட்பாட்டை மாற்றியமைக்காமல், மிகவும் இரக்கமுள்ள கத்தோலிக்க திருச்சபையை உருவாக்கிய சீர்திருத்த தலைவராக போப் பிரான்சிஸ் வரலாற்றில் இடம் பிடிப்பார். மக்களின் போப் ஆண்டவராக விளங்கியவர் பிரான்சிஸ். இவர் இந்த பெயரை தேர்ந்தெடுத்ததிலேயே அவர் தனது தனித்துவத்தை வெளிப்படுத்தினார். தனது செல்வத்தைத் துறந்து ஏழைகளுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த 13ஆம் நூற்றாண்டின் மறைபொருள் அசிசியின் புனித பிரான்சிஸ் நினைவாக பிரான்சிஸ் என்ற பெயரைப் பெற்ற முதல் போப் இவராவார்.

திருச்சபைக்குள் பாரம்பரியவாதிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்புகளை எதிர்கொண்ட போதிலும், விசுவாசிகளின் நேசத்தை அதிக அளவில் பெற்ற சீர்திருத்த தலைவராக விளங்கியவர் போப் பிரான்சிஸ். பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியவர்களை, சொந்த நாட்டை விட்டு வெளியேறி வேறு நாட்டில் குடியேறியவர்களை, காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களை என விளிம்பு நிலை மக்களை பாதுகாப்பதில் உறுதியாக இருந்தவர் போப் பிரான்சிஸ். மனிதர்கள் எதிர்கொள்ளும் இத்தகைய பிரச்சினைகளுக்கு சக மனிதர்களே காரணம் என எச்சரித்தவர் அவர்.

பாதிரியார்களால் பாலியல் துன்புறுத்தல்களை எதிர்



கொண்டவர்களுக்கு அவர் ஆதரவாக நின்றார். எனினும், அத்தகைய பாதிரியார்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மெதுவாக நடப்பதாக எழுந்த குற்றச்சாட்டையும் அவர் எதிர்கொண்டார்.

ஓர் எளிய நபராக இருந்தவர் போப் பிரான்சிஸ். சாதாரண அங்கிகளை அணிவதாகட்டும், ஆடம்பரமான அரண்மனைகளைத் தவிர்ப்பதாகட்டும், தனக்கு வரும் தொலைபேசி அழைப்புகளை தானே எடுப்பதாகட்டும், கணவரை இழந்த பெண்கள், கைதிகள் போன்றோருக்கு ஆறுதல் தெரிவிப்பதாகட்டும் அவர் என்றுமே எளிமையை விரும்புபவராகவும், எளிய மக்களோடு நிற்பவராகவும் இருந்துள்ளார். சமூக ஊடகங்கள் முதல் ஆபாசம் வரையிலான பிரச்சினைகள் குறித்து இளைஞர்களுடன் உரையாடிய போப் அவர். அது மட்டுமல்ல, தனது உடல்நலம் குறித்து வெளிப்படையாகப் பேசியவர்.

2021 இல் அவருக்கு பெருங்குடல் அறுவை சிகிச்சை நடந்தது. ஜூன் 2023 இல் குடலிறக்கம், மூச்சுக்குழாய் அழற்சி, முழங்கால் வலி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். இதனால் அவர் சக்கர நாற்காலியைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இரண்டு நுரையீரல்களிலும் உள்ள மூச்சுக்குழாய்களில் ஏற்பட்ட அழற்சி காரணமாக ஒரு மாதத்துக்கும் மேலாக அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டி இருந்தது. போப் பிரான்சிஸ் தனது பதவியை இராஜினாமா செய்வார் என மிக நீண்ட காலமாக ஊகங்கள் வெளிவந்தன. எனினும், அதனை திட்டவட்டமாக மறுத்தவர் போப் பிரான்சிஸ். போப்பாண்டவர் இராஜினாமா செய்வது சாதாரண விஷயமாக மாறக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

வத்திக்கானில் தனது முதல் ஈஸ்டருக்கு முன்பு, ரோம் சிறையில் கைதிகளின் பாதங்களை அவர் கழுவி முத்தமிட்டார். போப் பிரான்சிஸ் தனது முதல் வெளிநாட்டுப் பயணத்துக்காக, இத்தாலிய தீவான லம்பேடுசாவைத் தேர்ந்தெடுத்தார். இதற்குக் காரணம், ஐரோப்பாவுக்குள் நுழைய விரும்பும் பல்லாயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோருக்கு அந்த தீவுதான் நுழைவு வாயிலாக இருந்தது. உலகின் அலட்சியத்தையும் அதன் விளைவுகளையும் உணர்த்தவே அவர் இந்த தீவுக்குச் சென்றார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முதல் பதவிக் காலத்தில் மெக்சிகோவுக்கு எதிராக எல்லைச் சுவரைக் கட்ட அவர் திட்டமிட்டார். இது கிறிஸ்தவத்துக்கு எதிரானது என்று கண்டனம் தெரிவித்தவர் போப் பிரான்சிஸ். மேலும், அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையில் வரலாற்று நல்லிணக்கத்தை எளிதாக்க உதவினார். 2018 ஆம் ஆண்டு பிஷப்புகளை நியமிப்பது தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் மூலம் சீனாவுடனான உறவுகளை மேம்படுத்த அவர் முயன்றார்.

தன்பாலின ஈர்ப்பாளர் கத்தோலிக்கர்கள் விஷயத்தில், "தீர்ப்பளிக்க நான் யார்?" என்று கூறிய போப் அவர். விவாகரத்து பெற்ற மற்றும் மறுமணம் செய்து கொண்ட விசுவாசிகள் மத்தியில் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். திருநங்கை விசுவாசிகளின் ஞானஸ்நானத்தை அங்கீகரித்தார்.

கத்தோலிக்க படிநிலையின் முக்கிய நீரோட்டத்தில் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்க அவர் வழிவகுத்தார். முதலில் அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸில் "சேரிகளின் பிஷப்" ஆகவும், பின்னர் பிஷப்களின் பிம்பத்தை உடைக்கும் போப்பாகவும் தன்னை நிறுவியவர் போப் பிரான்சிஸ்.



# போப் பிரான்சிஸ் மறைவுக்கு உலக தலைவர்கள் இரங்கல்

போப் பிரான்சிஸின் மறைவுக்கு உலக தலைவர்கள் பலரும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "போப் பிரான்சிஸின் மறைவுக்கு உலகம் இன்று இரங்கல் தெரிவிக்கிறது. கத்தோலிக்க திருச்சபையைத் தாண்டி, அவர் தனது பணிவு மற்றும் ஏழைகள் மீதான தூய அன்பின் மூலம் கோடிக்கணக்கான மக்களை ஊக்கப்படுத்தினார்.

இந்த ஆழ்ந்த இழப்பை உணரும் அனைவருடனும் எனது எண்ணங்கள் உள்ளன. போப் பிரான்சிஸின் மரபு நம்மை நீதியான, அமைதியான மற்றும் இரக்கமுள்ள உலகத்தை நோக்கி தொடர்ந்து வழிநடத்தும். அவரது ஆன்மா ஆறுதல் காணட்டும்." என தெரிவித்துள்ளார்.

போப் பிரான்சிஸ் காலமானதைத் தொடர்ந்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "போப் பிரான்சிஸ், சாந்தியடையட்டும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனுடன் போப், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் உடன் தனித்தனி சந்தர்ப்பங்களில் சந்தித்த புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கடவுள் பாப்பரசர் பிரான்சிஸை ஆசிர்வதிப்பார் என அவரது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா சென்றுள்ள ஜே.டி. வான்ஸ் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "போப் பிரான்சிஸ் காலமான செய்தியை இப்போதுதான் அறிந்தேன். உலகம் முழுவதும் அவரை நேசித்த கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களுக்கு என் இதயம் இரங்குகிறது.

நேற்று அவரைப் பார்த்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன், இருப்பினும் அவர் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். ஆனால் கோவிட் தொற்றின் ஆரம்ப நாட்களில் அவர் ஆற்றிய மறையுரைக்காக நான் எப்போதும் அவரை நினைவில் கொள்வேன். அது மிகவும் அழகாக இருந்தது. கடவுள் அவரது ஆன்மாவை அமைதிப்படுத்தட்டும்." என தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "ஆழ்ந்த நம்பிக்கையும் எல்லையற்ற இரக்கமும் கொண்ட அவர், ஏழைகளை மேம்படுத்துவதற்கும், பிரச்சினை நிறைந்த உலகில் அமைதிக்காக அழைப்பு விடுப்பதற்கும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

மத்திய கிழக்கில் அமைதிக்காகவும், (காசாவில்) பிணைக் கைதிகள் பாதுகாப்பாகத் திரும்புவதற்காகவும் அவர் செய்த பிரார்த்தனைகள் விரைவில் நிறைவேறும் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து பிரதமர் டிக் ஸ்கூப் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "நாம் வாழும் காலத்தில் உலகின் மிக முக்கிய பிரச்சினைகளை அங்கீகரித்து அவற்றிற்கு கவனம் செலுத்திய ஒரு தலைவருக்கு உலகளாவிய கத்தோலிக்க சமூகம் அஞ்சலி செலுத்துகிறது. நிதானமான வாழ்க்கை முறை, சேவை மற்றும் இரக்கச் செயல்கள் மூலம் போப் பிரான்சிஸ், கத்தோலிக்கர்கள் மற்றும் கத்தோலிக்கரல்லாதவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தார். நாங்கள் அவரை மிகுந்த மரியாதையுடன் நினைவுகூருகிறோம்." என்று தெரிவித்துள்ளார்.

இந்திய ஆன்மிக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "போப் பிரான்சிஸ் ஓர் ஆழ்ந்த நம்பிக்கையாளராகவும், மாறுபட்ட பாரம்பரியவாதியாகவும் இருந்தார்! அவர் சீர்திருத்தத்தை ஆதரிப்பவராகவும், மதங்களுக்கு இடையேயான உரையாடலை ஆதரிப்பவராகவும் இருந்தார்.

சுற்றுச்சூழல்மீதானஅவரதுஅக்கறையும், மனித கடத்தலுக்கு எதிரான அவரது முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை. சிறந்த புரிதலுக்கான அவரது அழைப்பு அவரது ஆதரவாளர்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளிக்கும்.

புது டில்லி மற்றும் வொஷிங்டன், டி.சி. யில் நடைபெற்ற உலக கலாச்சார விழாவில் வாழும் கலைக்கான அன்பான செய்தியுடன் அவர் தனது தூதரை அனுப்பியிருந்தார்." என குறிப்பிட்டுள்ளார்.

# ஈபிள் கோபுர விளக்குகளை அணைத்து மறைந்த பரிசுத்த பாப்பரசருக்கு அஞ்சலி

மறைந்த பரிசுத்த பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்படும் என பாரிஸ் நகர முதல்வர் அன்னே ஹிடால்கோ அறிவித்துள்ளார்.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தனது 88ஆவது வயதில் காலமானதை அடுத்து, அவரது நினைவாக நேற்று இரவு பாரிஸின் புகழ்பெற்ற ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்படும் என்று பாரிஸ் நகர முதல்வர் அன்னே ஹிடால்கோ தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸ், தஞ்சம் தேடி வரும் அகதிகளை வரவேற்க வேண்டும் என்று வலியுறுத்தியவர் என அவர் குறிப்பிட்டார்.



இதனை நினைவுகூரும் வகையில், பாரிஸ் நகரில் உள்ள ஒரு இடத்திற்கு பாப்பரசர் பிரான்சிஸின் பெயரைச் சூட்டுவதற்கு நகராட்சி திட்டமிட்டுள்ளதாகவும் பாரிஸின் நகர முதல்வர் தெரிவித்துள்ளார்.






# பாப்பரசர் பிரான்சிஸின் மறைவையொட்டி உலகளாவிய ரீதியில் விசேட வழிபாடுகள்

உலகளாவிய ரீதியில் உள்ள தேவாலயங்களில் பாப்பரசர் பிரான்சிஸின் மறைவையொட்டி விசேட வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஆர்ஜென்டீனா, இந்தோனேசியா, இஸ்ரேல், பிலிப்பைன்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளில் மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வத்திக்கானில் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.









## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசுடன் இணைந்து வேலை செய்யத் தயார்!

### இப்படிக் கூறுகின்றார் சத்தியலிங்கம் எம்.பி.

(கி.வசந்தன்)

நாட்டின் பொருளாதாரத்தை ஆறு மாதங்களுக்குள் மாற்றுங்கள் என்று அரசாங்கத்தை கூறுவது இயலாத விடயம். அதற்கு நீண்டகாலம் எடுக்கும். அதற்கு நாங்களும் இணைந்து வேலை செய்யத் தயாராக இருக்கிறோம் என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பிரதேச தேர்தல் காரியாலயம் வவுனியா மாகறம்பைக்குளம் பிரதான வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வவுனியாவில் உள்ள நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இது ஓர் எல்லைப்புற மாவட்டம். இதன் இனப் பரம்பல் கணிசமான அளவு மாற்றப் பட்டிருக்கிறது. எந்த அரசாங்கம் வந்தாலும் இந்தச் செயற்திட்டம் நடை பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

தற்போது இந்த ஆட்சிமாற்றம் ஏற்பட்டமைக்கு முக்கிய காரணம் நாட்டின் பொருளாதார பிரச்சனையே. கடந்தகால ஆட்சியாளர்கள் விட்ட தவறே ஜே.வி.பி. என்ற என்.பி.பி. ஆட்சிய மைப்பதற்குக் காரணமாக இருந்தது.

இலங்கை மக்கள் என்ற வகையில் பார்த்தால் ஊழல் இல்லாத ஓர் ஆட்சி, மக்களுடைய சொத்தைக் கொள்ளை அடிக்காத அரசாங்கமும், ஆட்சியாளர் களும் இருக்க வேண்டியது அனைவ ருக்கும் பொதுவான ஒரு பிரச்சினை.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரை இதைவிட மேலதிகமாக இனப் பிரச்சினை என்ற ஒன்று இருக்கிறது. இந்த அரசாங்கம் பொருளாதார முன் னேற்றத்தை காண்பதற்குரிய முதற் படிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு நாங்கள் நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் ஆதரவு அளிக்கலாம்.

ஆனால் எமது அரசியல் போராட்டத் திற்கான தீர்வு கிடைக்கும் வரையில் தமிழ் மக்களாகிய நாங்கள் விடிவு நோக்கிய பயணத்தில் மாற்றமில்லாமல் தொடர்ந்து பயணிக்க வேண்டிய கடமை இருக்கிறது. தற்போதைய அரசுக்கு பயங்கவரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான சந்தர்ப்பங்கள் இருந் தும் அதனை நீக்காமல் இப்போதும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதேபோல அண்மையில் வவுனி யாவில் மக்களின் சொந்தக் காணிக ளுக்குள் வனவளத்திணைக்களம் எல்லை போடுகின்றமை தொடர்பாக பொதுமக்களால் முறைப்பாடு தெரி விக்கப்பட்டது. நான் அங்கு சென்ற மையால் அதனைத் தடுக்க முடிந்தது. ஏன் அரசாங்கத்தால் இதனை செய்ய முடியாது?

இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்த காணிகளுக்குள் செல் வதை இந்த திணைக்களம் எதற்காகத் தடுக்கிறது? வவுனியா பூவரசங்குளம் பகுதியில் உள்ளமக்கள் இது தங்க ளுக்குரிய காணி என்று தெரிவித்த போது அங்கு நின்ற வனவளத்தி ணைக்கள அதிகாரி தனது துப்பாக் கியை எடுத்து காட்டியுள்ளார். நான் அவர்களை எச்சரித்திருந்தேன்.

இதன் மூலம் அடக்கு முறை அரசி யலை செய்ய முயலுகின்றார்கள். அர சாங்கம் மாறினாலும் அரச நிர்வாகம் மாறவில்லை என்பது புலப்படுகிறது. அதனை மாற்றவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

நாட்டின் பொருளாதாரத்தை ஆறு மாதங்களுக்குள் மாற்றுங்கள் என்று கூறுவது இயலாத விடயம். அதற்கு நீண்டகாலம் எடுக்கும். அதற்கு நாங்களும் இணைந்து வேலை செய்யத் தயாராக இருக்கிறோம். அது பொது வான பிரச்சினை. ஆனால் இந்த மக்க ளின் காணி விடயங்களில் நிதி செல வளிக்காமல் உடனடியாக தீர்வினை வழங்கமுடியும். அதனை செய்ய ஏன் தயங்குகின்றனர்? இந்த நிர்வா கங்களை கையாள முடியாத கையா லாகாத அரசாங்கமாகவே இது இருக் கிறது. – என்று தெரிவித்தார்.





# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளுக்கு தமிழரசு முழு ஒத்துழைப்பும் வழங்கும்

## மட்டக்களப்பு எம்.பியான மருத்துவர் சிறிநாத் தெரிவிப்பு

(வாலகிருஸ்ணா)

ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி ஆகியோர் உறுதியான நிலைப்பாடுகளைக் கூறி இருக்கின்றார்கள். அவர்களுடைய இந்த விடயத்திற்கு நாங்கள் முழு மையாக ஆதரவினையும் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்க தயாராக இருக்கின்றோம் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.சிறிநாத் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டு தாக்குதலில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

நேற்றைய தினம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள – ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட – நினைவுத் தூபியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நினைவஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

முன்னாள் மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை தமிரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.சிறிநாத், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் முகமாக தீபச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. ஆத்மசாந்தி பிரார்த்தனையும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.சிறிநாத் கூறியவை. வருமாறு:–

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டு தாக்குதலின் மூலம் இந்த நாட்டில் பல அழிவுகளும் பிரச்சினைகளும் இடம் பெற்றிருந்தன. அன்றைய காலகட்டத்தில் ஆட்சி மாற்றம் இடம்பெறுவதற்கு முக்கிய காரணமாக இது காணப்பட்டிருந்தது.

மிக படு மோசமான முறையில் தங்களுடைய அரசியலுக்காகவோ அல்லது பயங்கரவாத நிகழ்வுகளுக்காகவோ ஒரு மதத்தின் பெயரால் மற்றைய மதத்தை – மத ஸ்தலங்களை – பொருளாதாரத்தை சீர்குலைக்கின்ற வகையில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றிருக்கின்றது.

மிக முக்கியமாக இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் பலர் மரணித்திருந்தாலும் பின்னணியில் இருந்த பலர் தண்டிக்கப்படாமல் நீதி காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எமது தமிழ் சமூகத்துக்கும் பல அழிவுகள் இடம் பெற்று இருக்கின்றன. கடந்த காலங்களில் எல்லா சந்தர்ப்பங்களிலும் இவ்வாறான நீதி மறுக்கப்பட்டிருக்கிறது அலட்சியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த விடயத்தில் இதற்கான ஒரு நீதி கிடைக்கக்கூடிய சூழல் இருக்கும் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருக்கின்றது. காலம் தாழ்த்தி கிடைக்கின்ற நீதி மறுக்கப்பட்ட நீதி என்று சொல்லப்பட்டாலும் கூட, அந்த நீதி நிச்சயமாக கிடைக்க வேண்டும். இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள், பின்னணியில் இருந்தவர்கள் அரசியல் தராதரம் இன்றி, அவர்களது அதிகார நிலை பற்றி சிந்திக்காமல், எல்லா

தொடர்ச்சி▼









# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளுக்கு தமிழரசு முழு ஒத்துழைப்பும் வழங்கும்













**தொடர்ச்சி▲**

குற்றவாளிகளும் தண்டிக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களுடைய அல்லது பாதிக்கப்பட்டவர்களுடைய மிகப் பிரதானமான இந்த கிறிஸ்தவ மக்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத்திலே மக்கள் மரிக்கின்ற நிகழ்வானது மிக மனவேதனையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகின்றதாக இருக்கின்றது. அந்தச் சமயத்தில் மக்கள் மிகப் பொறுமையாக மிக அமைதியாக இந்த விடயத்தை எதிர்கொண்டார்கள். இவ்வாறான இன மத குரோத செயல்கள் எதிர்காலத்தில் நடைபெற கூடாது.

இந்தக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கான நியாயம் கிடைக்க வேண்டும்.

இந்த காலகட்டத்தில் இதற்கான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க் கின்றோம். அதற்கான நகர்த்தல்கள், முன்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய மன ஆற்றுகையை குறைப்பதற்காக சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு எதிர்காலத்தில் இவ்வாறான செயல்பாடுகள் இடம் பெறாத வண்ணம் பாதுகாப்பு உறுதிப் படுத்த வேண்டும்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி ஆகியோர் இது தொடர்பான உறுதியான நிலைப்பாடுகளை கூறி இருக்கின்றார்கள். அவர்களுடைய இந்த நடவடிக்கைகளுக்கு நாங்கள் முழுமையாக ஆதரவினையும் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம். மிகப்பெரிய பலமாக இருக்கின்ற – தமிழ் மக்களின் அரணாக இருக்கின்ற – தமிழரசுக் கட்சி நீதியை நிலைநாட்டுகின்ற, வன்முறையை கட்டுப்படுத்துகின்ற விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

இது நிச்சயமாக இடம்பெற வேண்டும் இது ஒரு அரசியல் தேர்தல் கால உறுதிமொழியாக அல்லாமல் இந்த மக்களுக்கு உறுதியான நிலைப்பாட்டை வழங்குவதாக அமைய வேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பு.

கடந்த காலத்திலிருந்த அரசியல் தலைவர்கள் தமது அரசியல்தேவைகளுக்காக பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தார்கள்.அவையெதுவும் நிறைவேற்றப்படவில்லை. – என்றார்.



# மட்டு. இலுப்படிச்சேனை சங்குல குளத்தை உடைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு – ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலர்சேனை பகுதியிலுள்ள சங்குல குளம் ஒரு சில தனி நபர்களினால் உடைக்கப்படுவதால் குளத்திலுள்ள நீர் தொடர்ச்சியாக வெளியேறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப் பகுதி மக்கள் நேற்று செங்கலடி பிரதேச செயலகம் முன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை சுமார் 10.30 மணியளவில் செங்கலடி சந்தி பிரதான வீதி – சந்தியில் ஒன்றிணைந்த இலுப்படிச்சேனை கிராம மக்கள் பேரணியாக செங்கலடி பிரதேச செயலகம் வரை சென்று செங்கலடி பிரதேச செயலகத்திற்கு முன்னாலும் செயலக வளாகத்துக்குள் நுழைந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

‘குளத்தை உடைப்பதை நிறுத்து!’, ‘அரச அதிகாரிகளே எமது பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்!’, ‘அரசே எமக்கு உதவு!’ – போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடும் வெயிலுக்கும் மத்தியிலும் தமது வாழ்வாதாரம் அழிக்கப்படுவதாக தெரிவித்து தமது கைக்குழந்தைகளுடனும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதே வேளை ஆர்ப்பாட்ட இடத்திற்கு இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், இ.ஸ்ரீநாத் ஆகியோர் வருகை தந்திருந்தனர். தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு அமைப்பாளர் என்.திலகநாதன் உள்ளிட்டோர், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக பிரதேச செயலாளருடனும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

செங்கலடி பிரதேச செயலாளரர் கே. தனபாலசுந்தரம் ஆர்ப்பாட்டக்கார்களுடன் கலந்துரையாடினார். சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இதற்கான தீர்வைப்பெற்றுத்தருவார் என வாக்குறுதியளித்தார். இதையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதேச செயலாளரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளித்த பின்னர் கலைந்து சென்றனர்.



















# ஸாரானின் மதப் பயங்கரவாதத்தின் மறு தோற்றமாக சூப்பர் முஸ்லிம் அமைப்பை உருவாக்க முயற்சியாம்!

## அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிஸ் அமைப்பின் தலைவர் சிவதர்சன் சீற்றம்

(கனகராசா சரவணன்)

இலங்கையில் ஸாரானின் மத பயங்கரவாம் இப்போது சூப்பர் முஸ்லிம் பயங்கரவாத அமைப்பாக உருவாகியுள்ளது. கிழக்கை மதரீதியான குட்டி பாகிஸ்தான் போல உருவாக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா முயற்சிக்கின்றாரா? இந்த மாகாணம் மூவின மக்களும் வாழுகின்ற சமத்துவமான ஒரு மாகாணம். ஆகவே மத ரீதியாக் ஒரு மாகாணத்தைப் பிரிக்க ஒரு போதும் விடமாட்டோம் என அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் அமைப்பின் தலைவர் சிவதர்சன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சீயோன் தேவலாயத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவேந்தல் அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் ஏற்பாட்டில் குண்டு வெடித்த இடத்தில் உயிர் நீத்தவர்களுக்கு ஆத்மசாந்தி வேண்டி மெழுகுவர்தி ஏற்றி அஞ்சலி செலுத்தி நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களிக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தப் பெரும் தீவிரவாதத் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்துள்ளனர். 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இது ஒரு வேதனையான விடயம்.

உண்மையில் ஒரு வேதனையான நாள்களைக் கடந்து செல்கின்றோம். இந்தஒ பயங்கரவாத தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சூத்திரதாரிகளாக செயற்பட்டவர்களின் இந்த நடவடிக்கை இரத்த ஆறுகள் ஓடுகின்ற போது அதைப்பார்த்து ரசிக்க கூடிய ஒரு தீவிரவாத செயலாகவே கருதுகின்றோம்.

இதனை சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை. கண்ணீரோடு இதனைக் கடந்து செல்கின்றோம். வருடத்தில் ஒரு முறை இந்த நினைவேந்தலைச் செய்தாலும் ஒவ்வொரு நாளும் பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் வேதனையுடனும் கண்ணீருடனுமே நாள்களைக் கடந்து செல்கின்றனர் .



சொந்த பிள்ளை கண்முன்னே மரணித்த கொடூரமான செயற்பாட்டைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறான ஒரு மத தீவிரவாதத்தைத் திட்டமிட்டு செய்ததை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்து உயிர்த்த ஞாயிறு படுகொலை தொடர்பான சூத்திரதாரிகள் யார் என ஜனாதிபதி 21 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பார் எனத் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பமாக கூறிய வார்த்தைகளை நம்புகின்றோம். ஆனால் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த உயித்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான ஸாரான் என்பவன் மரணத்துக்கு முன்னர் கூறிய விடயம் 'அல்லாவை ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஹாபீர்கள். அவர்கள் கொல்லப்பட வேண்டும். நாங்கள் மரணித்தாலும், இதைப் பார்க்கின்ற ஒவ்வொரு முஸ்லிமும் ஹாபீர்களைக் கொலை செய்ய வேண்டும்' என்பதாகும். இது தவறானது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அந்த ஸாரானின் கடும் போக்குவாத சிந்தனையுடன் தற்போது சூப்பர் முஸ்லிம் பயங்கரவாத அமைப்பு உருவாகியுள்ளது. எனவே இந்த ஐ.எஸ்.ஐ.எஸ். குண்டு வெடிப்புக்குப் பின்னர் நாங்கள் தொடர்ந்து ஓர் அச்சமான சூழலில் இருக்கின்றோம். மீண்டும் நாங்கள் இப்படி மரணிப்பதற்கு தயார் இல்லை. எனவே இந்த மத பயங்கரவாதத்துக்கு எதிராக அரசாங்கப் பாதுகாப்புப் படைகள் செயற்பட வேண்டும்.

எங்கேயே ஒரு நாட்டில் யாரே ஒருவர் இஸ்லாமிய சமூகத்தைச் சுட்டு கொன்றார் என்பற்காக இலங்கை நாட்டில் அப்பாவி குழந்தைகளையும் மக்களையும் கொலை செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல். எம்.ஹிஸ்புல்லா இது முஸ்லிம்களின் தாயகம் என்கின்றார். கிழக்கில் மதரீதியான ஒரு தாயத்தை உண்டாக முயற்சிக்கின்றாரா? குட்டி பாகிஸ்தான் போல உருவாக்கு நினைக்கின்றாரா? அதனை கடைசி வரைக்கும் விடமாட்டோம். இது மூவின மக்களும் வாழுகின்ற சமத்துவமான ஒரு மாகாணம். எனவே மதரீதியாக மாகாணத்தை பிரிக்க முயற்சிப்பதை வன்மையாக கண்டிக்கின்றோம்.

எனவே பாதிக்கப்பட்ட சமூகம் என்ற ரீதியில் மனவேதனையுடன் சொல்லுகின்றோம். நாங்கள் திட்டமிட்டு கொல்லப்பட்டுள்ளோம். இது மன்னிக்க முடியாத விடயம். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை கொடு என யேசுநாதர் சொல்லியுள்ளார். ஆனால் அறைய வந்தால் கன்னத்தை கொடுத்திருப்போம். அவர்கள் குண்டுடன் கொல்ல வந்தார்கள் எனத் தெரியாது. எனவே மீண்டும் எமது சந்ததியை அழிக்க விடத் தயார் இல்லை.

ஆகவே ஜனாதிபதி தேர்தலின் போது கூறியவற்றை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும். உண்மையான சூத்திதாரி யார் எனக் கண்டுபிடித்துக் கைது செய்து, தீர்வைப் பெற்றுதர வேண்டும் இதனை வைத்து எவரும் அரசியல் செய்ய வேண்டாம். – என்றார்.



# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற சிறாரின் ‘கதைகேட்டு மகிழுங்கள்’ நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ‘கதைகேட்டு மகிழுங்கள்’ நிகழ்வு நேற்று முன்தினம் 20ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு கொழும் புத் தமிழ்ச் சங்க நூலகத்தின் சிறுவர் பகுதியில் ஆசிரியை திருமதி.பவானி குகப்பிரியா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் குழந்தைகள் கதை கேட்டும், கதை கூறி மகிழ்வதையும், கலந்து கொண்டோரையும் காணலாம்,











# புடவைக்கட்டில் விபத்து; இளைஞனுக்குப் படுகாயம்

(எஸ்.கீதபொன்கலன்)

நேற்று மாலை புல்மோட்டையில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸுடன் புடவைக்கட்டுப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் குச்சவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.**

**இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.**



**ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**02**



# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் பெருவாரியாக 'அளக்கப்பட்ட' விடயங்களான 'நல்லிணக்கம்', 'சமாதானம்', 'சமதர்மம்', 'எல்லோரும் சம உரிமை கொண்ட ஒரு நாட்டு மக்கள்' என்றவை பேச்சளவிலேயே இருக்கின்றன. தேர்தலுக்கான காலங்களில் பெரும்பாலான கட்சிகள் விளாசும் வழமையான வார்த்தைகள்தான் அவை. தேர்தல் முடிந்ததும் கொள்கையளவில் இந்த விதைகள் முளைப்பதில்லை.

ஆனாலும் அநுர அரசாங்கத்தில் ஒரு மாறுபாடு உண்டு. முந்தைய அரசுகள் போல் இனவாதத்தை வெளிப்படையாக வளர்க்காமல், அவை தவிர்க்கப்பட வேண்டும், ஒழிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேசுகின்றமையால், தமிழ் மக்களுக்கு ஒரு பயமற்றதும் நம்பிக்கை தருவதுமான சூழ்நிலையும் வளர்கிறது. அந்தச் சூழ்நிலைகளில் நடப்படும் மரங்கள், செடிகள் பின்னர் புதர்கள், காடுகளாகி அவர்களது இருப்பை அழிக்காமல் பார்ப்பது முக்கியமாக வேண்டும்.

தங்களது இனத்துக்கு என்று இக்கட்டு வரும் போது வாயால் அளந்த 'நல்லிணக்கம்', 'சமதர்மம்', 'சமாதானம', 'யாவரும் சம உரிமை கொண்ட ஒரு நாட்டு மக்கள்' என்பவை காற்றில் விடப்பட்டு, தம்மின மக்களின் படையணிகளும், அவர்களுடன் இயங்கிய ஒட்டுக் குழுக்களும், தமிழ் மக்கள் மேல் நடத்திய மனிதாபிமானமற்ற செயல்களை, அதே நாட்டின் மக்கள் என்பதையும் மறந்து, தம்மின மக்களைக் காபந்து பண்ணும் சிங்கள

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

தேசியவாதிகளாகத் தங்களை நிலைப்படுத்திக் கொள்ள முயலும் பண்பே வெளிப்படுகின்றது.

ஜோர்ஜ் ஒர்வெல்ஸ் (George Orwell) எழுதிய 'விலங்குப் பண்ணை' (Animal Farm) என்ற நாவலில் தெரிவிக்கப்பட்ட சித்தாந்தம்தான் இந்த இடதுசாரி கட்சியிலும் அதன் அரசாங்கத்திலும் தென்படுகிறது.

அதாவது, "எல்லா விலங்குகளும் (மனிதரும்) சரிசமமானவைதான். ஆனாலும் சில விலங்குகள் (சில மனிதர்கள்) அந்த சரிசமனில் இருந்து கொஞ்சம் உயர்ந்தவர்கள்" (All animals are equal, but some animals are more equal than others) என்பதுதான் அது.

நாட்டை மீட்டெடுப்பதற்காக விடுதலைப் புலிகள் அழிக்கப்படும் வரை போர் தொடரப்பட வேண்டும் என மஹிந்த அரசுக்கு முண்டு கொடுத் தவர்கள், சுனாமி மீள் புனர்நிர்மாண நிதிகளை விடுதலை புலிகளுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு உதவித் திட்டங்கள் மூலம் வழங்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பையே நீதிமன்றம் சென்று முடக்கியவர்கள், அதன் விளைவுகளையொட்டி நாடு வங்குரோத்து நிலைக்கு வரும் வரை கவ லைப்படாதவர்கள், மாற்று வழிகளில் அரசியல் அதிகாரத்துக்கு வரும் கட்டமைப்புகளை உருவாக் கும் போது மட்டும் 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' தருவதைத் தடை செய்யவில்லை.

ஆனால் இவை நடந்தமைக்கான அடிப்படைகள் என்ன, அவை மீண்டும் நடைபெறா வண்ணம் உரிய காரணிகளை ஆராய்ந்து உள சுத்தியுடன் அவற்றை நடத்தியவர்களை இனம் காணவோ தண்டனை தரவோ அவர்கள் தயாராகவில்லை.

அவ்வளவுதான்.

இவ்வாறான அடிப்படையில்தான் அநுர அரசின் புதிய அரசமைப்புச் சட்டம் நாட்டின் இனப் பிரச்சி னைக்கு தீர்வு காணும் என்ற பிரசாரப் பிம்பங்களும் அவர்களின் காணொளிகளின் கதாநாயகர்களால் காட்சிப்படுத்தப்படுகின்றன. அவற்றில் மாகாண சபையை காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13 ஆம் திருத்தத்தின் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு உள்ளூராட்சி, மாகாண சபைகளில் கூட அவர்களை வெற்றி பெறச் செய்து, அந்த வெற்றிகளில் அவர்களுடன் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்றெல்லாம் பரப்புரைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

எவ்வளவுதான் உயரப் பறந்தாலும் காக்கைகள் கழுகாவதில்லை. அதே போல் இரைக்கு கழுகும் நிலத்திற்கு வரத்தான் வேண்டும்.

எனது இந்தத் தொடர் எவ்வித கருத்துத் திணிப் பும் அல்ல. அவற்றுக்கான ஆதார தேடலும் அல்ல. வரலாற்றின் பதிவுகள். அந்த வரலாறுகள் காட்டிய - காட்டுகின்ற - பண்புகள். அவ்வளவுதான். வாசகர் கள் அவற்றிலிருந்து தெளிவடைய வேண்டும். ஏனெனில் சரித்திரங்களில் இருந்து கற்றுக் கொள்ளாதவர்கள் என்றுமே கற்றுக்கொள்ளப் போவதில்லை.

அநுர அரசின் காலம் 200 நாள்களை எட்டிக் கொண்டிருக்கிறது. தேன்நிலவு கழிந்து, வாழ்க்கைச் சவால்களை எதிர்கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபை தேர்தல்களையும் தங்கள் வசமாக்கிக் கொள்ளும் திட்டங்களில் அள்ளி வீசப்பட்ட வாக்குறுதிகளில், இப்போது விட்டுக்கொடுப்புகள் காட்டி, யதார்த்தத்தைப் பேச, மக்களிடையே வழ மையான மனக்கொதிப்புக்கள் அரும்பு கட்டும் காலங்கள்.

அவற்றைப் பாவித்து எதிர்க்கட்சிகள் இடையே ஏதோ ஒரு வித ஒற்றுமை. ரணில் அறிவித்த தனது 'மாற்று அரசாங்கம்' பட்டலந்த ரத்த வெள் ளத்தில் மிதக்கின்றது. ஆனாலும் ரணிலினதும் சஜித்தினதும் முன்னெடுப்புகள் அநுராவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாம் சுற்றுக் கணக் கெடுப்பிலாவது வெற்றி பெறும் வாய்ப்பைப் பெற் றுக் கொடுத்தது. தாங்கள் தங்களுக்குள் பிணக் குண்டு வாக்குகள் சிதறுண்டு போக இடமளிக்காமல் விட்டிருந்தால் அந்த வெற்றியை தடுத்திருக்க கூடும் என்ற எண்ணப்பாடே இப்போது தொடர் கின்றது. தங்களது பிரிவுகள், வடக்கிலும் வாக்குகள் சிதறுவதற்கும், தமிழ் மக்கள் பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பதற்கும் உந்துகோல் ஆகின என்பதையும் அவர்கள் கணக்கெடுக்கிறார்கள்.

இந்தக் கட்சித் தலைவர்கள் யாவரும் ஜனா திபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் காலங் களில் அரசமைப்புச் சட்டத்தில் இருக்கும் 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவோம் என்று குறிப்பிட்டாலும், அது எவ்விதமான முறையில் செய்யப்படும் என்பதை வசதிக்கேற்ப விவரித் தார்கள். ஆனால் எல்லோருக்கும் - மக்களுக்கும் கூட - 13 ஆம் திருத்தச் சட்டம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் எழுந்தது, இந்தியா அதனை இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அடிப்படைத் தீர்வாகக் கணித்து, அதனூடாக தன்னுடைய பாதுகாப்புத் தேவைகளையும் கவ னித்து, அத்திவாரங்களை செய்து கொண்டது என்பது தெரிந்திருந்தது.

ஆயினும், இம்முறை தேர்தல் வாக்குறுதிகளில் அநுரவைப் பொறுத்தவரை விடயம் சற்று வித் தியாசமானதாக இருந்தது. முன்னைய, அதேசமயம் தற்சமய தலைவர்கள் கூட, தாம் பதவிக்கு வந்தால் புதிய அரசமைப்பு சட்டத்தை கொண்டு வருவோம், அது பெரும்பான்மை மக்க ளின் அபிலாசைகளை உள்ளடக்கும் என்பார்கள். ஆனால் அநுராவோ வரவேற்கத்தக்க மாற்றம் ஒன்றில் தான் சகல மக்களுடனும் கலந்துரையாடி, முக்கியமாக பாதிக்கப்பட்ட சமுதாயத்தினரின் அபிலாஷை களையும் ஏற்று, எல்லோரையும் திருப்திப்படுத்தும் வகையில் ஓர் அரசமைப்புச் சட்டத்தை அமல் படுத்துவேன் என்றார்.

நாட்டு மக்களிடம் நீண்ட காலமாக நீடித்த விரக்தியும் இந்த வாக்குறுதிகளும் மக்களிடையே ஒரு புதிய மாற்றத்திற்கான நிலைமையை ஏற்படுத்தி, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான் மைக்கான வெற்றியைத் தேடித் தந்தன. நாடாளு மன்றத் தேர்தல் காலங்களில் அநுரா 13ஆம் திருத்தத்தை முழுமையாகவே நடைமுறைப் படுத்துவோம் என்பதை தென்பகுதிகளில் அடக்கி வாசித்தாலும், தமிழ் பகுதிகளில் கூட அநுராவின் தேசிய மக்கள் சக்தி முன் இல்லாதவாறு மூன்று ஆசனங்களைக் கைப்பற்றி தமிழ்த் தேசிய கட்சிக ளின் பிரதிநிதித்துவங்களை கேள்விக்குறியாக் கியது.

(தொடரும்)

# வடக்கில் சிங்கள் மேலாதிக்கம் காலூன்ற மக்கள் மறுபடியும் இடமளிக்கக் கூடாது!

## இப்படிக் கூறுகின்றார் தமிழரசுத் தலைவர் சி.வி.கே.




வடக்கில் காலூன்ற நினைக்கும் தேசிய மக்கள் சக்தியின் சிங்கள் மேலாதிக்கத்திற்கு மக்கள் மறுபடியும் அரசியல் ரீதியில் இடம்கொடுக்க கூடாது என வலியுறுத்தியுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வரவுள்ள உள்ளூ ராட்சி மன்ற தேர்தலை அதற்கானதாக மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண் டும் என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகை யில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு ஆரம்ப மாகவுள்ள நிலையில் 6 ஆம் திகதி தேர்தலும் நடைபெறும் எனவும் எதிர் பார்க்கின்றோம்.

உதேநேரம் உள்ளூராட்சி என்பது உள்ளூருக்கான அதிகாரங்களைக் கொண்டது. அது அபிவிருத்தியையும் வலுவான சமூகக் கட்டமைப்பின் பின்னணியையும் கொண்டது.

ஒவ்வொரு உள்ளூராட்சியும் அந்தந்தப் பிரதேசங்களைக் கொண்ட பிரதிநிதிகளை – குதிப்பாக தமிழர் பூர்வீக கட்சிகளை கொண்ட பிரதிநிதி களை ஃ தேர்ந்தெடுப்பது அவசியம்.

இந்நேரம் தமிழரசுக் கட்சி இம்முறை வடக்கு கிழக்கில் 58 சபைகளில் போட்டியிடுகின்றது. இந்த சபைகளுக்கு நாம் சிறப்பான வேட்பாளர்களை நிறுத் தியுள்ளோம்.

இந்நேரம் ஊழல் இல்லாத சபைக ளுக்கே நிதி என ஜனாதிபதி கூறுவதை ஏற்க முடியாது.

கடந்த காலத்தில் வடக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட நிதியில் எந்த நிதி திருப்பி அனுப்பப்பட்டது என்பதை எவரவது நிரூபியுங்கள். இதை நான் திருப்பி அனுப்பப்பட்டது என கூறும் தரப்பினருக்கு சாவாலாகவும் விடு கின்றேன்.

தேசிய மக்கள் சக்தியும் இம்முறை வடக்கில் உள்ள அனைத்து சபை களிலும் போடியிடுகின்றது.

ஆனால் எவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக, சுதந் திரமாக செயற்பட முடியாதிருக்கின் றார்களோ அதே போன்றவர்களாகவே இவர்களும் தென்னிலங்கையில் நிகழ்ச்சி நிரலை நிறைவுசெய்யும் ஏவு கருவிகளாகவே இருப்பர்.

குதிப்பாக சுயாதீனமாகச் செயற்பட குறித்த ஜே.வி.பி. கட்சியின் கொள்கை நிலைப்பாடும் இடங்கொடுக்காது.

இந்நேரம் கடந்த தேர்தல்களில் சொன்னது எதனையும் இதுவரை செய்யாதவர்கள், இனிச் செய்வார்களா?

இந்நேரம் அரச தரப்பு, அரச ஆதரவு சக்திகள் சுயேச்சையாகவும் நேரடி யாகவும் எமது மக்களை ஏமாற்றி வாக்குகளை அபகரித்தே – குறிப்பாக டக்ளஸ் தேவனந்தா மற்றும் அங்கை யனின் வாக்குகளை அபகரித்தே – வெற்றி பெற்றுள்ளனர்.

அந்த வகையில் சிங்கள மேலா திக்கம் இனி வடக்கில் எடுபடக்கூடாது. அதற்கு மக்கள் தெளிவுடன் செயற் படுவது அவசியம்.

மேலும் அரசியல் கைதிகள் விடு தலை என கூறுவது ஒவ்வொரு தேர்தல் கால பேசுபொருளே தவிர அது உண் மையான பேச்சு அல்ல.

அநுர நினைத்திருந்தால் தண்டனை பெறும் தமிழ் கைதிகளை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவித் திருக்கலாம். அதை ஏன் செய்ய வில்லை?

அநுர அரசு தாம் ஒரு மாற்றத்துக் கானவர்களாக இருந்தால் இன நல்லி ணக்கத்துக்கு எடுத்துக்கட்டாக விடுவிப்பை செய்திருக்கலாலாம்.

அதை செய்ய இவர்கள் விரும்ப மாட்டார்கள்.

இவர்களே இருக்கும் அரசியல் கட்சிகளுக்குள் மிகவும் இனவாதத்துடன் பயணிப்பவர்கள்.

இதேநேரம் ஊழல், மோசடியை இல்லாதொழிப்போம் என்று கூறும் இவர்கள் இன்று ஊழலையும் மோச டியையும் கடத்தல்களையும் செய் கின்றனர். – என்றார்.

# இந்திய மீனவரின் பிடிபட்ட 33 படகுகளை நடுக் கடலில் மூழ்கடிப்பதற்கு நடவடிக்கை

## மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்தின் உதவி நாடப்பட்டுள்ளது

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு அரசு உடைமையாக்கப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை நடுக்கடலில் மூழ்கடிக்க மீன்பிடி துறைமுக கூட்டுத் தாபனத்திடம் கப்பல் உதவியை கடற் றொழில் திணைக்களம் நாடியுள்ளது.

பிடிபட்ட இந்த விசைப் படகுகளை மீன் பெருக்கம் திட்டத்தின் கீழ் நடுக் கடலில் மூழ்கடிக்கக் கடற்றொழில் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக, அரசு உடைமையாக் கப்பட்டு யாழ்ப்பாணம், மயிலிட்டித் துறைமுகத்தில் தரித்து வைக்கப்பட்ட படகுகளில் ஒரு பகுதி நடுக்கடலிற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

அடுத்த மாதம் ஆரம்பப்பகுதியில் இவை நடுக்கடலில் மூழ்கடிக்கப்பட வுள்ளன.

இதற்காக முதல் கட்டமாக 33 படகு களை துறைமுகத்தில் இருந்து எடுத்துச் சென்று நடுக்கடலில் மூழ்கடிக்கும் பணிக்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டு உதவுமாறு கடற்றொழில் திணைக்களம் மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனத்திடம் கோரியுள் ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள 57 இந்திய விசைப் படகுகளில் இருந்தே இந்த 33 படகுகள் நடுக் கடலில் மூழ் கடிக்கத் தெரிவாகியுள்ளன.



# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் பேரணிக்கும் தடை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 50 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த நடை பவனி பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது.



யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் 50 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பழைய மாணவர் சங்கம் கலைப்பீடத் துடன் இணைந்து ஏற்பாடு செய்த நடை பவனியே தேர்தல் காலத்தை காரணம் காட்டி பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

பல்கலைக் கழகத்தில் இருந்து பலாலி வீதி வழியாக கந்தர்மடம் சந்தியை அடைந்து, அரசடி வீதி, பிறவுண் வீதி ஊடாக கலட்டிச் சந்திக்குச் சென்று மீண்டும் பல்கலைக் கழகம் திரும்ப திட்டமிடப்பட்டபோதும் தேர்தல் காலத்தில் இவ்வாறான பேரணிகள் அனுமதிக்க முடியாது எனப் பொலிஸார் தெரிவித்து தடை போட்டனர்.

இதனையடுத்து பொலிஸ் உயரதிகாரிகள், தேர்தல் செயலகம் ஆகியவற்றின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டும் அனுமதி வழங்கப்பட வில்லை.

இறுதியில் பழைய மாணவர்களில் வேட்பாளர்கள் தவிர்ந்து பேரணி செல லவும் அனுமதிக்கப்படாத காரணத்தால் பிரதான வாசல் வழியில் இருந்து விஞ் ஞான பீட வாசல் கதவுவரை நடைபவனி இடம்பெற்றது.









# சிறையிலிருக்கும் தாயாரின் விடுதலை கோரி யாழ். ஊடக அமையத்துக்கு வந்த சிறார்கள்!

## உருக்கத்துடன் ஜனாதிபதிக்குக் கோரிக்கை

அரசியல் காரணங்களுக்காகச் சிறையில் இருக்கும் தனது தாயாரான தயாபரராஜ் உதயகலாவை அவரது உடல்நலம் கருதியும், சிறுவர்களான எமது நலன்கருதியும் சிறையிலிருந்து வெளியில் வருவதற்கான வாய்ப்பை ஜனாதிபதி ஏற்படுத்தித் தரவேண்டும் என அந்தொ பெண்ணின் மகள் டிலானி தயாபரராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றுத் தனது பேத்தியாரான அருணோதய னாதன் ரஜனியுடன் ஊடக சந்திப்பை முன்னெடுத்த அவர் மேலும் கூறுகையில் –

சர்வமக்கள் கட்சியின் உருவாக் கத்தால் பிள்ளையானுடன் ஏற்பட்ட முரண்பாடுகளால் எமது தயார் தண்ட னைக் கைதியாக சிறையில் இருக் கின்றார்.

எமது தாயார் அரசியல் சூழ்ச்சி கார ணமாக சிறையில் இருக்கின்றமையால் நாம் நான்கு சகோதரர்களும் பாட்டியின் பராமரிப்பில் தற்போது பல அசௌ கரியங்களைச் சந்தித்தி வருகின் றோம்.

இந்நேரம் சிறையிலிருக்கும் எமது தாயார் குற்றம் செய்யாது சிறையில் இருப்பதால் பல்வேறு உடல் உபாதை களுக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாகி மருத்துவ வசதி கூட கிடையாத நிலையில் இருக்கின்றார்.

இந்த நிலை அவரது உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்துவதாக இருக் கின்றது.

அந்த வகையில் எமது குடும்ப நிலையையும் பிள்ளைகளான எமது நிலையையும் கருத்தில் கொண்டு தாயாரை மனிதாபிமானமான நடவடிக் கையாக விடுவிக்க ஜனாதிபதி நடவ டிக்கை எடுக்க வேண்டும்.– என்றும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

# சாயி பாபாவின் மகாசமாதி தினத்தில் கொழும்பில் ‘ஆராதனா மகோற்சவம்’

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 14 ஆவது மகாசமாதி தினத்தை ஒட்டிய ‘ஆராதனா மகோற்சவம்’, கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தில், எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை, காலை பிரசாந்திக் கொடியேற்றப்பட்டு, பாபாவின் புனித நீராடல் மற்றும் ஓங்கார சுப்பிர பாதத்துடன் நடைபெறவுள்ளது.

அத்துடன் சாயி பூஜை பஜனைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்பட வுள்ளது. இந்தப் புனிதமான அன்னதானம், சாயி நிலையத்தின் வழக்கப்படி, சாயிபாபா வின் விஷேட தினங்களில், நடை முறைப்ப டுத்தி வரும் முறையில் வத்தளை யிலுள்ள பிரித்திபுர அநாதரவற்ற குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் வழங் கப்படும். ஏனைய பக்தர்களுக்கு விருந்தோம்பல் செய்யப்படும். அன்றைய தினம் மாலை 4 மணிக்கு புட்டபர்த்தி மகா சமாதியில் வைத்து பூஜித்து எடுத்துவரப்பட்ட, பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் ஐம்பொன் திருவுரு வச்சிலைக்கு, நவபிஷேகம், சாயி பூஜை, பஜனை, மங்கள ஆராத்தி இடம்பெறும்.

மகாசமாதி தினத்துக்கு முன்பாக, நாளை ஏப்ரல் 23ஆம் திகதி, புதன்கிழமை மாலை 6 மணியளவில், ‘ஸ்ரீருத்ரா யாகம்’ நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 22.04.2025




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.




இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப் படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப்ப டுவார்கள்.

உங்கள் துணையுடன் சமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.

உயரழுத்தம் மற்றும் பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.இன்று சுறுசுறுப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று அதிக சிந்தனையுடன் காணப் படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்கவேண் டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர் வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் சாதகமாக இருக்காது.




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப் புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.




உங்கள் பொறுமை சோதனைக்குள் ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணி களை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.04.2025




இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். மேலும் உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.இன்று உங்களுக்கு தோள்களில் வலி ஏற்பட வாய்புள்ளது.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பணியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பிரச்சினைகள் ஏதும் இருக்காது.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துனையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.



# தமிழரசுக் கட்சி புதுக்குடியிருப்பு பிரதேச வேட்பாளர்கள் ரவிகரனுடன் ஆலோசனை

(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் புதுக்குடியிருப்பு பிரதேசக்கிளைக்குட்பட்ட உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்களுடன் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனது மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் எவ்வாறு எதிர்கொள்வது என்பதுதொடர்பில் பேசப்பட்டது.

அத்தோடு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காணப்படும் 07 உள்ளூர் அதிகாரசபை வட்டாரங்களையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றுவதற்கான ஆலோசனைகளும் இதன்போது வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டன.